184—

அங்கன்வாடி மையம்

***36212—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, பிள்ளையார்நத்தம் கிராமத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, பிள்ளையார்நத்தம் கிராமத்தில் அங்கன்வாடி மையம் ஏற்கெனவே அமைக்கப்பட்டு, வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அந்த மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு சர்வே எண் 35-ல் நிலம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக தீவிரமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கோ உருவாகி, எங்கோ ஒன்றாகி, எங்கோ பிரிந்திடும் கிளை நதிகளை ஒன்றாகத் திரட்டியதைப் போல, முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியைப் போல, முல்லைப் பெரியாறுக்கு அணை கொடுத்த பொறியாளர் பென்னி குயிக் அவர்களுக்கு நினைவு மணிமண்டபமும் (மேசையைத் தட்டும் ஒலி) திருவுருவச் சிலையும் வழங்கி, சமூக நீதிக்கு பெருமை சேர்த்த, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நிருவாகத் திறன்மிக்க முடிவுகளால் (மேசையைத் தட்டும் ஒலி) இன்று வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி கிடைத்துள்ளது. தமிழர்களின் உரிமையை நிலைநாட்டிய மாண்புமிகு அம்மா அவர்களின் வெற்றிக்கு*

வலு சேர்க்கும் விதமாக, முல்லைப் பெரியாறு அணை மேற்பார்வைக் குழு நேற்றையதினம் நேரில் சென்று அணையைப் பார்வையிட்டது. தென் தமிழக விவசாயிகளின் வாழ்வாதார உயர்விற்கு முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தி சாதனை படைத்த மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட மதுரை மேற்கு ஒன்றியம், பிள்ளையார்நத்தம் கிராமத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தின் கட்டடப் பணிகள் செய்வதற்காக அரசு அதிகாரிகள் பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தப் பணிகளைத் துரிதமாக செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த வேகத்தில் கேள்வியைக் கேட்டாரோ, அதைவிட அதிகமான வேகத்தில் பணிகள் தீவிரமாக நடைபெறும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் ஒரு வரம் கேட்டால், கும்பிட்ட கரங்கள் விலகும் முன்பாக (மேசையைத் தட்டும் ஒலி) வரங்களை வழங்குவார்கள். அந்த வரங்களுக்கு வலுசேர்க்கும் விதமாக, இன்று தமிழக மக்களுடைய வாழ்வாதாரம் உயர்வதற்காக நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், என்னுடைய சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் பகுதியில் 37 ஊராட்சிகளில் 20 குக்கிராமங்கள் இருக்கின்றன. அந்தப்

பகுதிகளில் மொத்தம் 67 அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. அதில் 14 அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு, அந்தப் பகுதிகளை நேரடியாக ஆய்வு செய்ய அரசு அதிகாரிகளை அனுப்பி, அந்தப் பணிகளை உடனடியாக செய்து கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி, விரும்பி தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மதுரை மாவட்டத்தில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் மொத்த மையங்களின் எண்ணிக்கை 361. மேற்கு வட்டாரத்தில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் மையங்களின் எண்ணிக்கை 32. அந்த மையங்களில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற மையங்களையும் இணைத்து, வெகு விரைவில் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

185—

காகித அட்டை தொழிற்சாலை

***47169—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம்,